thiraimalar.com
# திரைமலர்.காம்
மாதம் இருமுறை இதழ் நவம்பர் 16-30 இதழ்-1 மலர்-4



**100**
நாள்தான்
கால்ஷிட்
**இந்தியன்-2**
மீண்டும்
தடைபடுமா?

## புளுகு மூட்டை சூர்யா

# இந்தியாவில் முதன் முதலில் கட்டப்பட்ட

# நிரந்தர திரையரங்கு




1905 இல் திருச்சி புகைவண்டியில் வேலை பார்த்து வந்த "சுவாமிக்கண்ணு வின்சென்ட்" என்பவர், 'எடிசன் சினிமாட்டோகிராப்' என்ற திரைப்படம் காண்பிக்கப்படும் நிறுவனத்தை ஆரம்பித்தார். தென்னிந்தியாவின் முதல் அரங்காக இத்திரையரங்கு விளங்கியது. "சுவாமிக்கண்ணு வின்சென்ட்" இந்து மதத் திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறி இயேசுவின் புகழைப் பரப்பும் நேநக்கத்தில் பல ஊர்களுக்குச் சென்று "இயேசுவின் வாழ்க்கை" என்ற படத்தை வெளியிட்டார்.

தொடர்ந்து லூமி சகோதரர்கள் தயாரித்த "ரயிலின் வருகை" என்ற குரும்படத்தை தமிழகம் முழுதும் சுற்றித் திரையிட்டுக் காட்டியிருக்கிறார். (ரயில் ஒன்று ரயில் நிலையத்தில் வந்து நிற்பதுதான் மொத்த படமே. ஆரம்பத்தில் அதைப் பார்த்த மக்கள் ரயில் தம் மீது மோதிவிடும் என்று அலறி அடித்துக் கொண்டு ஓடினராம்.) இவர் தயாரித்த படங்களும் சேர்த்து, மொத்தம் 136 திரைப்படங்கள் பல ஆண்டுகளுக்குப் பின்னர் கோயம்புத்தூரில் "வெரைட்டி ஹால்" என்ற அரங்கை அமைத்து, "வள்ளி திருமணம்" போன்ற படங்களைத் தயாரித்து வெளியிட்டார்.

நிரந்தரத் திரையரங்குகள் உருவாகாத நேரத் தில் அவரே அதற்கான உபகரணங்களோடு தமிழகம் முழுதும் சுற்றி படங்களைத் திரை யிட்டிருக்கிறார்.

ஆந்திரம், கேரளம், மும்பை, கல்கத்தா, பெஷாவர், இலங்கை உள்ளிட்ட இடங்களிலும் இவர் படங்களைத் திரையிட்டிருக்கிறார். இதற்காக அப்போது வெளிநாட்டில் இருந்த படம் தயாரிக்கும் கம்பெனியிடம் ஒப்பந்தமும் போட்டிருக்கிறார். சினிமா மீது மக்களுக்கு இருந்த ஆர்வம் கண்டு தமிழகம் முழுதும் டெண்ட் திரையரங்குகள் நிறைய உருவாக்கியிருக்கிறார்.

1914 ஆம் ஆண்டு சென்னையில் "வெங் கையா" என்பவரால் நிரந்தர சினிமா திரையரங்கம் கட்டப்பட்டது. அந்த திரையரங்கம்தான் "கெயிட்டி" தியேட்டர். இந்தியாவில் கட்டப்பட்ட முதல் திரையரங்கு இதுதான்.

# நிஜத்திலும் போட்டி போடும் விஸ்வாசம் கதாபாத்திரங்கள்

நடிகர் அஜித் மற்றும் நடிகை நயன்தாரா நடிப்பில் கடந்த வருடம் வெளிவந்து பாக்ஸ் ஆபீஸ் ஹிட்டான விஸ்வாசம் திரைப்படம் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது.

கிராமத்தில் சொந்த பந்தங்களுடன் வசித்து வரும் அஜித். அஜித் மீது ஊர் மக்கள் தனி மரியாதை வைத்திருக்கிறார்கள். அஜித்நயன்தாராவை காதலித்து திருமணம் செய்து கொள்கிறார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. குழந்தை சிறு வயதாக இருக்கும் போதே அஜித் நயன்தாரா இருவரும் பிரிந்து விடுகின்றனர். நயன்தாரா தனது மகள் அனிகாவை கூட்டிக் கொண்டு மும்பை சென்றுவிடுகிறார்.

10 வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் கோவில் திருவிழாவுக்கு ஊர்மக்கள் அனைவரும் கூடுவது வழக்கம். அந்த வகையில் தனித்து வாழும் தனது மருமகன் மனைவி, மகளுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று ஆசைப்படும் மாமா தம்பி ராமையா, நயன்தாரா, அனிகாவை திரும்ப அழைத்து வரும்படி கூறுகிறார்.

இதையடுத்து இருவரையும் அழைத்துவர மும்பை செல்கிறார் அஜித். அங்கு தனது மகள் அனிகாவுக்கு, ஜெகபதி பாபுவால் ஆபத்து இருப்பதை அறிந்து கொள்கிறார்.

அஜீத்தான் அப்பா என்பதை மறைத்து, தனது மகளை காப்பாற்றும் குடும்ப பாங்கான படம்தான் விஸ்வாசம்.

இந்த திரைப்படத்தில் முக்கியமாக கதாபாத்திரங்கள் நடிகர் அஜித்தின் மகள் அனிகாவும் வில்லனின் மகளும் தான்.

இந்த திரைப்படத்தில் வில்லனுக்கு மகளாக சலோனி குழந்தை நட்சத்திரமாக நடித்து இருப்பார். அந்த திரைப்படத்தில் நடிகர் அஜித் மகளுடன் ஓட்டபந்தயத்தில் வெற்றிபெற போட்டி போடுவார்.

நிஜ வாழ்விலும் அனிகாவுடன் ஆடை விஷயத்தில் பெரிய போட்டியே போடுகிறார் சலோனி. இவர் கவர்ச்சி உடையில் இருக்கும் புகைப் படம் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

சினிமாவில் மட்டுமல்ல நிஜ வாழ்க்கையில் மாடலிங் துறையில் போட்டி போட ஆரம்பித்துள்ள கதாபாத்திரங்கள்.





# அன்பு

ஒருவன் மிகவும் அழகாக ஒரு பெண்ணை மனமுடித்தான், அவள் மிது அளவு கடந்த பாசத்தையும் காட்டினான்.

இவ்வாறிருக்க,

ஒரு நாள் அவள் ஒரு தோல் நோய்க்கு ஆளானாள், அவளது அழகு படிப்படியாக குறையத் தொடங்கியது.

அவளது கணவன் ஒரு பயணமொன்றை மேற்கொண்டிருந்தான், அவன் திரும்பி வரும்போது, ஒரு விபத்துக்குள்ளாகி அவனது கண் பார்வையை இழந்தான்.

ஆனால் எந்தவித பிரச்சனையும் இன்றி அவர்களது மண வாழ்வு தொடர்ந்தது.

நாட்கள் செல்ல செல்ல மனைவி தனது அழகும் படிப்படியாக குறைவடைந்து செல்வதை உணர்ந்தால்.

ஆனால் குருடனான கணவனுக்கோ இது ஒன்றும் தெரியாது இருவரும் அவர்கள் இருவருடைய அன்பில் எந்த வேறுபாடும் மற்றமும் காட்டது வாழ்ந்தனர்.

அவன், அவளை அதிகமாக நேசித்தான், அவளுடன் அன்பாக நடந்துகொண்டான்.

அப்படியிருக்க ஒரு நாள் அவள் இறந்துவிட்டாள், அவளது மரணம் அவனை மிகவும் வேதனைப்படுத்தியது.

தன் அன்பு மனைவியின் இருதி சடங்குகளை நிறை வேற்றி அவளை அடக்கம் செய்தபின் அவன் தனி மனிதனாக அவ்விடத்தை விட்டு திரும்பினான்.

அவன் திரும்பி வரும்போது, அவனுக்கு பின்னாலிருந்த ஒரு மனிதர் அவனை அழைத்து

"எவ்வாறு நீ தனியே நடந்து சொல்கிறாய்? இது வரைக்காலம் நீ உன் மனைவியின் உதவியுடன் அல்லவா நடந்தாய்" எனக்கேட்டார்.

அதற்கு அவன்....

"நான் குருடன் இல்லை எனது மனைவி நோய் வாய்பட்டுள்ளாள் என்பதை அறிந்தால், அவள் மனம் காயப்படக்கூடும் என்பதால் தான் குருடன் போல பாசங்கு செய்தேன்'' என்றான்

"அவள் சிறந்ததொரு மனைவியாக இருந்தால் அவள் பின்னடைவுக்கு நான் ஒரு காரணமாக இருக்க வீரும்பவில்லை அதனால்தான் நான குருடன் போல பாசாங்கு செய்தேன்!!!"






நாயகன் ஒரு போக்கிரியான ஆள். கல்யாணம் பண்ணிவைத்தால் பொழைச்சிக்குவான்(!) என ஜாதககாரர் சொல்ல, பெண் பார்க்க போகிறார்கள்.

போன இடத்தில் கதவு மூடிக்கொள்ள, நாயகி தனக்கு கல்யாணத்தில் விருப்பமில்லை என சொல்கிறாள்.

கொஞ்சம் ரிலாக்சாகி, தங்களது கடந்த கால வாழ்க்கையை இயல்பாக பகிர்ந்துகொள்கிறார்கள். தவறுதலாக வேறு வீட்டுக்கு வந்துவிட்டோம் என அறிகிறார்கள், பிரிகிறார்கள்.

இருவரும் குணத்தில் எதிரெதிர் துருவம் என்றாலும், நாயகனுக்கு சமைப்பதில் ஆர்வம். இதனை சரியாக பயன்படுத்திக் கொள்ள நினைக்கின்றனர்.

நாயகிக்கு நடமாடும் வேனில் சமைக்கும் தொழிலை செய்வதில் ஆர்வம். இருவரும் இணைகிறார்கள். அதில் வெற்றியும் பெறுகிறார்கள்.



தெலுங்கில் விஜய் தேவரகொண்டா நடித்து மிகப்பெரிய வெற்றி பெற்று, தேசியவிருது எல்லாம் பெற்றிருக்கிறது.

பிறகு இந்தி, மலையாளம் என ஒரு சுற்று சுற்றி இப்பொழுது தமிழில் எடுத்திருக்கிறார்கள். படம் நன்றாகவும் சுவாரஸ்யமாகவும் உள்ளது.

ஹீரோ, ஹீரோயின் இருவருக்குள்ளும் ஒரு புரிதல், ஒரு நெருக்கம் உருவாக்கும் காட்சிகள் படத்தில் மிக குறைவு.

ஒரு பார்வையாளனாக என்னால் அவர்கள் சேர்ந்தே ஆகவேண்டும் என்ற உணர்வுவரவில்லை. இதே படத்தை மலையாளத்தில் டிரைலர் பார்த்தேன். அப்படியே ரீமேக் செய்யாமல், மலையாளத்திற்கு தகுந்தவாறு மாற்றி எடுத்திருப்பதாக உணர்கிறேன். தமிழிலும் கொஞ்சம் அந்த குறையை சரி செய்திருக்கலாம் என தோன்றுகிறது.

படத்தில் நாயகி நாயகனிடம் ஓரிடத்தில் சொல்வாள். ஒரு ப்ரீ அட்வைஸ். கேட்கிறியா? என்பாள். அது போல எனக்கும் ஒரு ப்ரீ அட்வைஸ் இருக்கிறது. குணத்தில் வெவ்வேறு துருவங்கள் கொண்டவர்கள் நண்பர்களாக பழகலாம். வாழ்க்கையில் இணைவது மிகவும் சிக்கலாகிவிடும்.

டிஸ்னி ஹாட் ஸ்டாரில் வெளியாகியிருக்கிறது. பாருங்கள், மென்மையான படம்.



# 100 நாள்தான் கால்ஷிட் இந்தியன்–2 மீண்டும் தடைபடுமா?

கமல் நடிப்பில் வெளிவரவிருக்கும் இந்தியன்–2 படம் பல்வேறு தடைகளை தாண்டி, தற்போது ஒரு முடிவிற்கு வரவிருக்கிறது.

இந்தியன்2 படப்பிடிப்பு பெரும்பாலும் முடிந்த நிலையில், திடீரென படப்பிடிப்பு பணிகள் நின்றுபோனது.


படத்தை முடித்து கொடுக்காமல் வேறு படங்களை இயக்க இயக்குனர் ஷங்கருக்கு தடை விதிக்க கோரி, சென்னை ஐகோர்ட்டில் லைகா நிறுவனம் தொடர்ந்த, வழக்கை தனி நீதிபதி தள்ளுபடி செய்தார். இதை எதிர்த்து லைகா சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனு தலைமை நீதிபதி சஞ்சீவ் பானர்ஜி, நீதிபதி பி.டி. ஆதிகேசவலு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, லைகா நிறுவனம் தரப்பில் ஆஜரான வக்கீல்,

‘‘இந்த விவகாரத்தில் தீர்வு காண்பதற்காக சுப்ரீம் கோர்ட்டு ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.பானுமதி நியமிக்கப்பட்டு உள்ளார். அவரது மத்தியஸ்த நடைமுறையில் பங்கேற்க உள்ளோம். அந்த சமயத்தில்



# INDIAN 2 RELEASE DATE




ஷங்கர் வேறு படம் இயக்கக் கூடாதுஎன்ற கோரிக்கையை வலியுறுத்த போவதில் லை'' என்றும் கூறப் பட்டது.

அப்போது ஷங்கர் தரப்பில் ஏற்கனவே ஒப்புக் கொண்ட படங்களை முடிக்க அனு மதிக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களை பதிவு செய்த நீதிபதிகள், மேல்முறையீட்டு வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

கமல் ஷங்கர் கூட்டணியில் லைகா நிறு வனம் தயாரிக்கும் இந்த படம், கடந்த ஆண்டு படப்பிடிப்பு தளத்தில் கிரேன் விபத்து ஏற்பட்ட போது நிறுத் தப்பட்ட, இப்படத்தின் படப்பிடிப்பு அதன்பின் தொடங் கப்படவில்லை. மேலும் தயாரிப்பு தரப்புடன் ஏற்பட்ட மோதல் காரணமாக இந்தியன் 2 படத்தை கிடப்பில் போட்ட இயக்குனர் ஷங்கர், ராம்சரணை வைத்து தெலுங்கு படம் ஒன்றை இயக்க தயா ரானார்.

இதன்பின் இந்தியன் 2 படத்தை முடித்து கொடுக்காமல் வேறு படங்களை இயக்க ஷங்கருக்கு தடை விதிக்க வேண்டும் என்று தயாரிப்பு நிறுவனம் தரப்பில் கோர்ட் டில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், இந்த பிரச்சனையை இருதரப்பும் பேசி தீர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்திய தோடு, ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை மத்தியஸ்தராக நியமித்தது. இதையடுத்து நடந்த பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டது.

## கமல் முட்டுக்கட்டையா?

இயக்குநர், தயாரிப்பாளர் பிரச்சனை ஒருபக்கம் முடிவிற்கு வந்த நிலையில், இப்படத்திற்கு நடிகர் கமல் முட்டுக்கட்டை போடும் நிலையில் உள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியன் 2 படத்தின் படப்பிடிப்பு மீண்டும் தொடங்கப் படுவது எப்போது என்பது குறித்த தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, வருகிற டிசம்பர் மாதம் இப்படத்தின் ஷூட்டிங் தொடங்கும் என்று கூறப்பட்டுள்ளது, இப்படத்தை முழுவதும் நடித்து முடிக்க நடிகர் கமல்ஹாசன் 100 நாட்கள் கால்ஷீட் ஒதுக்கி உள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது கமல் மிகவும் பிசியாக உள்ளதாக கூறப்படுவ தால் 100 நாட்களுக்க மேல் இப்படத்திற்கு கால்ஷீட் கொடுக்க முடியாது?

சொந்த கட்சிப்பணி, பிக்பாஸ் நிகழ்ச்சி மேலும் கை யிருப்பு படம் என்று கமல் மிகவும் பிசியாக உள்ளார்.

மேலும் கொரானா 3வது அலை எப்போது வரும் என்ற பீதி ஒருபக்கம் உலக அளவில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இக்காலக்கட்டத்தில் மீண்டும் ஏதேனும் தடையோ... பிரச்சனையோ ஏற்பட்டாலும், கமல் கொடுத்த 100 நாட்களுக்குமேல் இந்தியன் 2 படத்திற்குரிய நாட்களை தாண்டி படம் எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், இந்தியன் 2 படப்பிடிப்பிற்கு கமல் மிகப்பெரிய தடையாக இருப்பார் என்று சினிமா வட்டாரத்தில் தெரிவிக்கின்றனர். ஆக மொத்தத்தில் இந்தியன் 2 படம் வெளிவரவேண்டு மானால் இன்னும் பல்வேறு தடைகளை தாண்டியாக வேண்டும், சினிமா வட்டாரத்தில் இதுபோன்று வேறு எந்த படமும் இழுத்தடிக்கப்படவில்லை என்று ரசிகர்கள் மத்தியில் பேச்சு அடிபடுகிறது.




# குட்பை சொல்ல ஸ்ருதிஹாசன் முடிவா?

கமல் மகளான நடிகை ஸ்ருதி ஹாசன் பல்வேறு படங்களில் கதா நாயகியாக நடித்து பிரபலமானவர், 'ஏழாம் அறிவு' திரைப்படத்தின் மூலம் அறிமுகமான இவர். 3, பூஜை, புலி, வேதாளம் ஆகிய படங்களில் நடித்தார்.

ஸ்ருதிஹாசன் நடிப்பில் சமீபத்தில் லாபம் திரைப்படம் வெளியானது. இதில் விஜய் சேதுபதி கதாநாயக னாக நடித்து இருந்தார். தியேட்டரில் வெளியான இப்படம் எதிர்பார்த்த வரவேற்பு பெறவில்லை.





ஸ்ருதிஹாசன் சமூக வலைத்தள பக்கத்தில் அடிக்கடி கவர்ச்சிபுகைப் படங்கள், வீடியோக்கள் என பதிவு செய்து வருவார்.

சமீபத்தில் கவர்ச்சி புகைப்படத்தை வெளியிட்டு இருக்கிறார். மேலும் முதுகு பக்கத்தில் இருக்கும் தன் பெயரை சத்தமாக படியுங்கள் என்று ஸ்ருதிஹாசன் பதிவு செய்திருக் கிறார். இதற்கு ரசிகர்கள் பலரும் கிண்டல் செய்து கமெண்ட் செய்த தால் மிகுந்த கவலையில் ஆழ்ந்தார் ஸ்ருதி.

ஸ்ருதி ஹாசன் தற்போது மும்பையை சேர்ந்த டூடுல் கலைஞரான சாந்தனு ஹசாரிகா என்பவரை காதலித்து வருகிறார். திருமணம் செய்யாமலேயே இருவரும் ஒன்றாக மும்பையில் வாழ்ந்து வருகின்றனர். தனது காதலருடன் ஜோடியாக தீபாவளி கொண்டாடிய புகைப்படங்களை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார். இந்த புகைப்படங்கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.




இந்தப் புகைப்படத்திற்கு பல்வேறு கமெண்ட் வந்த வண்ணம் உள்ளது. திருமணம் செய்யாமல் ஒன்றாக வாழ்வது தவறு என்ற கண்ணோட்டத்தில் பல்வேறு அறிவுரை வந்ததால், கடுப்பான ஸ்ருதி விரைவல் சமூகவலைதளங்களில் இருந்து வெளியேறும் முடிவில் உள்ளதாக நட்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.




# ஜெயிக்கும் ஜாதகம் எது?

நன்றாக மலர்ந்து மனம் வீசுகின்ற மலர்கள் தேனீக்களை கவர்ந்து இழுப்பது போல அனைத்து தரப்பு மக்களையும் தன்பால் ஈர்க்க வல்லது சினிமா திரைப்படத்தின் மீது கவர்ச்சிக் கொள்வது தமிழர்களுக்கோ இந்தியர்களுக்கோ மட்டுமே உள்ள விஷேச குணம் அல்ல உலக மக்கள் அனைவருக்குமே சினிமாவின் மீது ஒரு காதல் எப்போதும் மாறாத வண்ணம் உள்ளது மரணப் படுக்கையில் கிடக்கும் கிழவன் கூட அவனை சினிமா பிடிக்க வருகிறார்கள் என்றால் எழுந்து உட்கார்ந்து கொள்வான் ஓடி விளையாடும் குழந்தைகள் கூட சின்னத்திரையில் ரஜினிகாந்த் வந்தால் விளையாட்டை விட்டுவிட்டு படம் பார்க்க அமர்ந்து விடும் அந்த அளவு சினிமாவின் மீது ஒரு வெறியே எல்லா மக்களுக்கும் இருக்கிறது

சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை இல்லாத மனிதர்களும் குறைவு சிலர் அதற்கான முயற்சிகளில் பகிரங்கமாக ஈடுப்படுகிறார்கள் பலர் ஆசையை அடக்கி கொண்டு நடமாடுகிறார்கள் அவ்வளவு தான் வித்தியாசம் சினிமாவில் நடிக்க வேண்டும் சினிமாவை எடுக்க வேண்டும் என்று விரும்புகிற அனைவராலும் அந்த இலக்கை அடைய முடிகிறதா என்றால் இல்லை என்ற பதிலை தவிர்கவே முடியாது

சென்னையில் கோடம்பாக்கம் வடபழனி போன்ற பகுதிகளில் சினிமா கனவோடு சுற்றி திரிகின்ற இளைஞர்கள் பலரை காணலாம் இவர்களின் பலருக்கு ஒரு வேளை உணவு கூட கிடைப்பது இல்லை ஊரில் அம்மா அப்பாவிடம் அண்டி வாழ்ந்தாலாவது ஒரு கவளம் சோறு கிடைக்கும் இங்கே வயிறும் காய்ந்து மனதும் காய்ந்து படுக்க இடம் கூட இல்லாமல் அலைகிறார்கள் ஆனால் அவர்களின் சினிமா ஆசை மட்டும் கொஞ்சம் கூட குறைவதே இல்லை எப்படியாவது யார் காலில் விழுந்தாவது சினிமா துறைக்குள் நுழைந்து விட வேண்டும் என பிடிவாதம் பிடிக்கிறார்கள்

சென்னை மத்திய இரயில் நிலையத்தில் ஒரு நாளைக்கு வந்திறங்கும் நபர்களில் நூற்றுக்கு இருபது பேர்கள் சினிமாவில் பங்கேற்க வேண்டும் என்றே கிராமங்களில் இருந்து வருகிறார்கள் ஹோட்டலில் சர்வர் வேலை கிளீனர் வேலை என்று செய்து கொண்டே ஸ்டியோக்களில் ஏறி இறங்கும் பலரும் சென்னை மாநகரில் உண்டு இப்படி சினிமாவில் ஜெயிக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பவர்களில் எத்தனை பேர்களால் வெற்றி வாகை சூட முடிகிறது? ஒரு லட்சம் நபர்களில் ஒருவர் என்றால் அதுவே அதிகமான கணக்கு தான்

வேலை செய்தால் சினிமாவில் தான் வேலை செய்வேன் இல்லை என்றால் பட்டினி கிடந்தது கூட சாவேன் என்ற வறட்டு பிடிவாதத்தால் ஊரில் உள்ள சொந்த பந்தங்களை இழந்து தனக்கென்று கிடைக்கும் நல்ல வாய்ப்புகளையும் இழந்து தனது வாழ்க்கையை கூட பலிக்கொடுத்து சுய கவுரவம் என்பதே என்னவென்று அறியாமல் வாழும் அப்பாவி மனிதர்கள் எத்தனையோ பேர். இவர்களும் சரி இவர்களை போல ஆகாமல் திரைப்பட துறையில் கால் பதித்து வெற்றி பெற வேண்டும் என்று



நினைப்பவர்களும் சரி முதலில் தங்களுக்கு சினிமா வாய்க்குமா தான் அதில் வெல்ல முடியுமா என்பதை அறிந்து கொண்டு செயல் பட்டால் யாருக்கும் எந்த தொல்லையும் இருக்காது

சினிமா தொழிலாகட்டும் அல்லது மற்ற எந்த தொழிலாகட்டும் அதை செய்ய நினைப்பவர்கள் வெறும் ஆர்வத்தையும் எதிர்பார்ப்பையும் மையமாகக் கொண்டு முயற்சிகளில் ஈடுபடுகிறார்களே தவிர தங்களால் அது முடியுமா அது தங்கள் இயல்புக்கு ஒத்து வருமா என்பதை யோசிப்பதே கிடையாது இப்படி யோசிக்காமல் பல செயல்களை செய்து வாழ்க்கை என்ற இன்ப ரசத்தை உடைந்த பாத்திரத்தில் ஊற்றி வீணாக்கி விடுகிறார்கள்

யார் யார் என்னென்ன தொழில் செய்யலாம் அந்த தொழிலில் எந்த அளவு வெற்றி பெறலாம் பத்தோடு பதினொன்றாக சராசரியாக போக முடியுமா அல்லது தனி வெற்றியாளராக ஜொலிக்க முடியுமா என்பதை எல்லாம் நமது பிறந்த ஜாதகம் மிக தெளிவாக கணித்து தந்து விடுகிறது அதை அறிந்து அதன் படி செயல் பட்டாலே போதும் நிச்சயம் வாழ்க்கை முழுவதும் நிம்மதி என்ற தென்றல் காற்று வீசும்

சிலர் நான் சினிமாவில் நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன் ஆனால் எனது ஜாதகமோ நீ நடிகனாக முடியாது மின்சார பொருட்களை இயக்குகின்ற வேலையை தான் செய்ய முடியும் என்கிறது எனது ஆர்வத்தை குழி தோண்டி புதைக்கவும் முடியாது புதியதாக எலக்ட்ரிக்கல் வேலையை கற்றுக் கொள்ளவும் முடியாது என்று சொல்லி சினிமாவில் நடிக்கவே மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறார்கள் இதானால் அவர்களால் எதிலும் வெற்றி பெற முடியாமல் போய் விடுகிறது நடித்தால் மட்டு தான் கலைச்சேவை என்பது மூட நம்பிக்கை சினிமாவிற்கு தேவையான எலக்ட்ரிகல் வேலையை சற்று சிரமப் பட்டு கற்றுக் கொண்டாலும் கலைக்கு செவையாற்றியது போலவும் இருக்கும் வாழ்க்கயை நல்லப்படியாக நடத்துவதாகவும் இருக்கும் இதை சம்பந்தப் பட்டவர்கள் யோசிக்க வேண்டும்

இன்னும் சிலர் எனக்கு ஜோதிடம் கடவுள் சகுனம் இவற்றில் எல்லாம் நம்பிக்கை கிடையாது நம்முடைய திறமையும் அனுபவமும் மட்டுமே நமக்கு வெற்றி தோல்விகளை தரவல்லது எனவே எத்தனை இடர்பாடுகள் வந்தாலும் போராடுவேனே தவிர சோர்ந்து போகமாட்டேன் என்கிறார்கள் இவர்களின் உழைப்பிற்கு நாம் தலைவணங்க் வேண்டியது தான் அதற்காக சென்னைக்கு போக வேண்டும் என்று பெங்களூர் சாலையில் பயணப்படுவது போல் வீணாக தவறான இடத்தில் தவறான் நேரத்தில் உழைப்பவர்களை நம்மால் புத்தி சொல்லி திருத்த முடியாது

வேறு சிலர் ஜோதிடம் பார்த்து தொழிலை தேர்ந்தெடு என்பது அனுபவ பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய விஷயம் தான் ஆனால் இன்று எத்தனை பேருக்கு முழுமையாக ஜோதிடம் தெரிகிறது லாரி வாங்கலாமா என்று ஜோதிடம் கேட்டால் ஹோட்டல் நடத்து என்கிறார்கள் இவர்கள் பேச்சை நம்பி ஹோட்டல் நடத்தி நஷ்டப்பட்டு வேறொரு ஜோதிடரிடம் போய் கேட்டால் எந்த மடையன் உன்னை ஹோட்டல் நடத்த சொன்னது உனக்கு பூ வியாபாரம் தான் உகந்தது என்கிறார்கள் இப்படி ஆள் ஆளுக்கு மனதில் பட்டதை சொல்லி குழப்புகிறார்களே தவிர தெளிவான வழியை காட்ட யாரும் இல்லையே என்கிறார்கள்



இன்னும் சிலர் ஓரளவு நன்றாக ஜோதிடம் அறிந்தவர்களை சந்திக்க வேண்டும் என்றால் நாள் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது அப்படியே சந்தித்தாலும் பெரும் தொகையை காணிக்கையாக் கொடுக்க வேண்டியுள்ளது அதற்கெல்லாம்




எங்களுக்கு சக்தி இல்லையே கடவுள் பெயரில் பாரத்தை போட்டு செய்வதை செய்வோம் நடப்பது நடக்கட்டும் என்கிறார்கள் இதுவும் நியாயமாகத்தான் தெரிகிறது

இருந்தாலும் நமது ஜாதகத்தில் சினிமா துறையில் வெற்றி பெற முடியுமா அதுவும் எந்த பிரிவில் வெற்றியடையலாம் என்பதை சுலபமாக அறிந்து கொள்ள ஒரு வழி இருக்கிறது வராகமிகிரர் தாம் எழுதிய நூலில் இந்த வழியை நமக்கு காட்டுகிறார் சற்று பொறுமையும் நிதான புத்தியும் இருந்தாலே ஜோதிடர்களை நாடி செல்லாமல் ஓரளவு நாமே தெரிந்து கொள்ளாம்

உங்கள் ஜாதக நோட்டை எடுத்துக்கொள்ளுங்கள் அதில் ராசி கட்டத்தில் குரு எங்கே இருக்கிறது என்பதை பாருங்கள் குரு இருக்கும்இடத்திலிருந்து எண்ணிக் கொண்டே வந்தால் ஐந்து ஒன்பது மூன்று ஏழு பதினொன்று இரண்டு பனிரெண்டு ஆகிய இடங்களில் சூரியன் மற்றும் சுக்கிரன் இருந்தால் நீங்கள் நடிப்பு துறையில் புகழ் பெற்றவராக வர வாய்ப்புள்ளது குருவோடு சூரியன் சேர்ந்திருந்தாலும் இந்த வாய்ப்பு உங்களுக்கு கிட்டும்.




அதே போல குரு இருக்கும் ராசிக்கு மூன்று ஐந்து ஏழு ஒன்பது பதினொன்று ஆகிய இடங்களில் சுக்கிரன் இருந்தால் திரைப்பட இயக்குனராக வளருவதற்கு வாய்ப்பு உள்ளது குரு கிரகத்திலிருந்து ஒன்று மூன்று ஐந்து ஏழு ஒன்பது பதினொன்று ஆகிய இடங்களில் சுக்கிரனும் சந்திரனும் இருந்தால் நீங்கள் புகழ்பெற்ற திரைப்பட கதாசரியராக வர வாய்ப்பு உள்ளது இதே போல குரு இருக்கும் இடத்திலிருந்து மூன்று ஏழு பதினொன்று ஆகிய இடங்களில் சுக்கிரனும் புதனும் சேர்ந்திருந்தால் திரைப்பட கவிஞனாக வலம் வருவீர்கள் இசை அமைப்பாளராக வருவதற்கு குரு இருக்கும் இடம் முதல் ஒன்று ஐந்து ஒன்பது ஆகிய இடங்களில் சுக்கிரனும் ராகுவும் அல்லது சுக்கிரனும் சூரியனும் இருக்க வேண்டும் பாடகராக வருவதற்கு இரண்டு பனிரெண்டு ஆகிய இடங்களில் சுக்கிரனும் புதனும் இருக்க வேண்டும்

இது தவிர பாட்டு குழுவினர் ஒளிப்பதிவாளர் தயாரிப்பாளர் பட தொகுப்பாளர் சண்டை பயிற்சியாளர் விநியோகஸ்தர் விளம்பரத்தார் திரை அரங்கு உரிமையாளர் இவர்களின் ஜாதகங்களில் குரு சுக்கிரன் செவ்வாய் புதன் ஆகிய கிரகங்கள் ஒன்றை ஒன்று பார்த்தோ சம்மந்தப் பட்டோ இருக்கும் இவர்கள் நிச்சயமாக சினிமாவை மூலதனமாக கொண்டு வாழ்க்கை நடத்துபவர்களாக இருப்பார்கள்

இவைகளை எங்களால் கணிக்க முடியுமா என்று கவலை படுபவர்கள் அல்லது எங்களுக்கு வேறு வேலை இல்லையா என அங்கலாய்ப்பவர்கள் தங்களது சோம்பேறி தனத்தை சற்றேனும் விட்டு எதாவது ஒரு ஜோதிட புத்தகத்தை வாங்கி அதில் உள்ள விஷயங்களை படித்து புரிந்து கொள்ளாம் அவைகளை புரிந்து கொள்ள பெரிதாக ஜோதிட அறிவு தேவை இல்லை சராசரி மனிதர்களே அறியும் வண்ணம் தான் பல நூல்கள் எளிமையாக தமிழில் உள்ளது

இந்த கிரகங்கள் எல்லாம் இப்படி அமைந்திருந்தும் சினிமா துறையிலேயே பல காலங்கள் அனுபவ பட்டும் புகழும் பணமும் சம்பாதிக்க முடியவில்லையே என வருந்துபவர்கள் சித்தர்கள் கண்டுபிடித்து பயன் படுத்திய ஜனதன வசிய மூலிகை அஞ்சனத்தை பயன் படுத்தி நல்ல பலனை பெறலாம் இன்று சினிமா துறையில் கொடி கட்டி பறக்கும் பலர் இந்த அஞ்சனத்தை ரகசியமான முறையில் பயன் படுத்துபவர்களாகவே இருக்கிறார்கள்

நீங்களும் உங்கள் ஜாதகத்தை ஒரு முறைக்கு இரு முறை ஏன் சில முறை கூட நன்றாக கவனித்து ஆராய்ந்து பாருங்கள் அதில் கலை சம்பந்தப் பட்ட வாய்ப்பும் வாழ்க்கையும் உங்களுக்கு இல்லை என்பது தெளிவாக தெரிந்தால் அடுத்த வேலையை கவனித்து வெற்றி பெற பாடு படுங்கள் அதை விட்டு விட்டு தலையால் பாறையை மோதி பிளந்து விடலாம் என்று வீண் முயற்சி செய்து உங்கள் வாழ்வையும் உங்களை நம்பி இருப்பவர்களின் வாழ்வையும் துன்பபடுத்தாதீர்கள்.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**
மேலும் தொடர்பு கொள்ளவும்
https://www.ujiladevi.in
**போன்: 09442426434**

# என்னவன் பக்கம்

## தாடி

பெண்ணே உன் கண்கள் மூலம்
என்ன உரம் போட்டாய்
நீ சென்றவுடன் என் முகத்தில்
கருஞ்செடி வளர்கிறதே.

❖ ❖ ❖

ஆயிரம் தோல்வி கண்ட எனக்கு
வெற்றி கிடைக்கவில்லை
ஆயினும் ஒரு தோல்வியில்
கண்ட வெற்றி.

## என் கடிதம்

என் உடலில் ஆயிரம்
தழும்புகள் உள்ளன
ஆனால் என் மனதில்
நீதான் தழும்பு

## எல்லை

பிறக்கும்போது அழுகையின்
எல்லையைத் தொட்டேன்...
வளரும்போது விளையாட்டுகளின்
எல்லையை தொட்டேன்
படிக்கும் பருவத்தில் கல்லூரியின்
எல்லையைத் தொட்டேன்
வேலைக்கு செல்லும்போது பணத்தின்
எல்லையைத் தொட்டேன்
மங்கையே உன்னை நேசித்தபொழுது காதலின்
எல்லையைத் தொட்டேன்
உன்னுடன் சேரும்போது இன்பத்தின்
எல்லையைத் தொட்டேன்
என்னவளே இன்று நீ பிரியும்போது மரணத்தின்
எல்லையைத் தொட்டுவிட்டேன்.

## ஹைக்கூ

பெண்ணே நீ மூடியது
ஜன்னலை மட்டுமல்ல
உன் இதயத்தையும்தான்
திறக்காதே!
ஏனென்றால் – நான்
வேறொருவளின் இதயக் கதவை
திறந்துவிட்டேன்.




சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம்,

கீதாசமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்




ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்

பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்

YouTube LIKE & SHARE



# ஆண் பெண் தலைமுடி பிரச்சனை எளிய தீர்வு

ஆண் பெண் இருபாலருக்கும் முக்கியபிரச்சனை களில் ஒன்று தலை முடிஉதிர்வு. இயற்கை மருந்து, மருத்துவர்களின் ஆலோசனை யின் பேரில் எடுத்துக்கொள்ளும் மருந்து என பலரும் முடி உதிர்வை தவிர்க்க முயல்கின்றனர். இதற்கு துறை சார்ந்த வல்லுநர்கள் கூறு வது என்ன என்று பார்ப்போம்.

உங்களுக்கு முடி கொட்டும் பிரச்சனை இருக் கிறதா என்று எப்படி கண்டுபிடிப்பது? எவ்வளவு முடி கொட்டினால் முடி கொட்டும் பிரச்சனை இருக் கிறது என்று அர்த்தம்? கொட்டிய மீண்டும் முடி நன்கு வளர என்ன செய்யலாம்? என பார்ப்போம்.

"தினமும் 50-80 முடிகள் உதிர்ந்தால், அது இயல்பே. அதுகூட விழக்கூடாது என்று நம்மால் எதிர்பார்க்க முடியாது. காரணம், அது முடி வளர்ந்து விழுவதின் சுழற்சி. இந்த முறையை ஆனாஜென், கெடாஜென் மற்றும் டெலோஜென் என்று கூறுவார்கள். ஆனாஜென் என்பது, முடி வளரும் நிலை, கெடாஜென் என்பதில் முடி மேற்கொண்டு வளராது, விழவும் விழாது ஆனால், டெலாஜென் என்ற கட்டத்தை அடையும் போது முடி உதிர்ந்துவிடும்.

இவ்வாறு உள்ள இந்த சுழற்சியில், ஒருவருக்கு ஒரு நாளுக்கு 100 முடிகள் வரை கொட் டலாம்.

> ஒரு நாளுக்கு 100 முடிகள் வரை கொட்டலாம். ஆனால் அதற்கும் மேலாக, 150 முடிகளோ அல்லது நீங்கள் ஒவ்வொரு முறை தலை வாரும்போதோ முடி உதிர்ந்தால், முடியின் மீது அதிக கவனம் தேவை

ஆனால் அதற்கும் மேலாக, 150 முடிகளோ அல்லது நீங்கள் ஒவ்வொரு முறையும் வாரும்போதோ முடி உதிர்ந்தால், முடியின் மீது கவனம் செலுத்தும் நேரம் வந்து விட்டது என்று அர்த்தம்" என்கின்றனர் அழகுக்கலை நிபுணர்கள்.

"சிலருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டால் முடி கொட்டும். உடலில் சத்துகள் சரியாக இல்லை என்றால் முடிகொட்டும். டைபாய்ட், ஜாண்டிஸ் மாதிரி நோய் வந்தவர்களுக்கு, நோய் தாக்கியபோது கொட்டாமல், முடி டெலோஜென் நிலையை அடைந்த பின்பு, அதாவது நோய் குணமான 1.5 மாதங்களில் கொட்டும்.

அத்தகைய நிலையில், பயப்பட எதுவுமில்லை. நிச்சயமாக முடி வளரும்" என்கிறார் அழகுகலை நிபுணர் கீதா.

"உங்களில் தலைமுடி எப்போது வளரவே செய்கிறது. பல நேரங்களில் அது வளரும் வேகத்திலேயே மாற்றம் ஏற்படுகிறது. ஆனால், அதற்கு ஏற்ப நாமும் சத்தான உணவு, சுகாதாரமான வாழ்க்கையை கொண்டிருந்தால். அதுவும் தொடர்ந்து வளரும்."

அவ்வாறு முடி உதிர்வு அதிகம் உள்ளவர்கள், எண்ணெய் மசாஜ் அல்லது ஸ்பா போன்றவை செய்து கொள்ளலாம் என்கிறார் அவர்.

இவ்வாறு மசாஜ் செய்வதையும் தாண்டி, முடிக்கு ஊட்டம் அளிக்க சில இயற்கையான பொருட்கள் அடங்கிய ஒரு ஹேர் பேக் குறித்தும் அவர் பேசினார்.

வில்வ மர இலையின் பொடி, பொடுகை போக்க உதவும் எலுமிச்சை தோலை காய வைத்த பொடி, முருங்கை இலையின் காயவைத்த பொடி, வெட்டிவேர், ஹென்னா, ப்ரிங்கராஜ் என்று கூறப்படும் கரிசலாங்கன்னி, செம்பருத்தி போன்றவற்றை, பொருட்களை ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து, கத்தாழையுடன் சேர்த்து, ஒரு கலவையாக மாற்றி, எண்ணெய் தடவிய தலையில் பூசி, வெயில் காலத்தில் 30 நிமிடங்களும், மழைக்காலத்தில் 10–15 நிமிடங்கள் மட்டும் ஊர வைத்து தலைக்கு குளிக்கலாம் என்கிறார் அழகுக்கலை நிபுணர் கீதா.

**தலைமுடி உதிர்வதை தடுப்பது எப்படி? நரை முடியை கருப்பாக்க என்ன வழி?**

முடியின் அடர்த்தியை அதிகரிக்க முடி அதிகம் உதிர்ந்த நிலையில், தலையில் மிகவும் குறைவான அளவை முடி உள்ளவர்கள், ஹேர் ஃபைபர் (Hair fiber) என்று கூறப்படும் துகள்களை தலையில் போட்டுக்கொண்டால், அடர்த்தியாக தெரியும். இது ஒரு தற்காலிக வழிதான் என்றபோதிலும், முக்கிய நாட்களில் மக்களுக்கு உதவும் வழி என்கிறார் அவர்.

**தலை முடி கொட்டுவது ஏன்? அதைத் தடுக்க வீட்டிலேயே என்ன செய்யலாம்?**

ஆனால், இந்த பிரச்சனைக்கான தீர்வு, சரியான மருத்துவம் மற்றும் கட்டுப்பாடான உணவு முறையில் உள்ளது. "இதில் முக்கியமான விஷயம் எண்ணெய். உதிர்ந்த முடிகள் மீண்டும் முளைக்க இதுவே உதவியாக இருக்கும்.

நல்லெண்ணை, தேங்காய் எண்ணெய், ஆலிவ் எண்ணெய் என எதுவாக இருந்தாலும், சுத்தமான எண்ணெய் எடுத்து, சற்றே சூடாக்கி, நம் தலைப்பகுதியில் தடவுவதோடு, சுழற்சி முறையில் தலைக்கு மசாஜ் போல செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது, அந்த இடங்களில் ரத்த ஓட்டம் அதிகரிக்கும். இதுவே முடி மீண்டும் வளரவும், அந்த பகுதியில் உள்ள முடிக்கு கூடுதல் சத்துகள் கிடைக்கவும் உதவியாக இருக்கும்." என்கிறார் அழகுக்கலை நிபுணர் வி.கீதாவிநாயகம்.



தொகுப்பு: ஷ்யாம்

# சினிமா துறையில் ஆர்வமுள்ளவரா நீங்கள்... நிருபராக பணியாற்ற விரும்புகிறீர்களா?

சினிமா, சின்னத்திரை, லைப்ஸ்டைல், லேடீஸ் ஸ்பெஷல் போன்ற பல்துறையில் பணியாற்ற விரும்புகிறீர்களா?

## அனுபவமில்லையா?

## கவலைவேண்டாம்...

எங்களுடன் பயணிக்க விரும்புகிறீர்களா?

தொடர்பு கொள்ளவும்

**9444264610**

# சமையலை மிக அழகாக சொல்லித்தரும்



## கீதாசமையல் YouTube சேனல்

**சமையலில் புதியவரா நீங்கள்?**
**பேச்சிலர் லைப்பில் தனியாக சமைத்து சாப்பிடுபவரா?**
**புதிய வெரைட்டி சமையலை விரும்புபவரா?**
**ஆனால் சமைக்க தெரியவில்லை என்று வருத்தப்படுகிறீர்களா?**

சமையல் என்பது மிகப்பெரிய கலை, ஒவ்வொரு உணவிலும் ஒவ்வொரு சமையல் பொருட்களை சேர்த்து சமைக்கும்போது விதவிதமான உணவுகள் கிடைக்கும், எந்த உணவில் எந்த பொருளை சேர்த்தால் என்ன சுவையில் உணவை தயாரிக்கலாம்என்பதை நன்கு அறிந்தவர்கள் கற்றுத் தேர்ந்த சமையல்கலை நிபுணர்களாவார்.

தற்போதைய காலத்தில் ஓட்டல் உணவை விரும்பி சாப்பிடும் கலாச்சாரத்தின் உச்சத்தை பலர் கண்டுள்ளனர், சுவைக்காக சேர்க்கப்படும்பல்வேறுகலவைகளால், அந்த உணவேஒரு கட்டத்தில் விஷமாக மாறுவதையும் நன்கு அறிந்தவர்கள் தற்போது சுயமாக கஞ்சி வைத்தாவது குடித்து பசி ஆறினால் போதும் என்ற மனநிலைக்கு வந்து சுயமாக சமைக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுபோன்ற நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்ய காத்திருக்கிறது **கீதா சமையல் யூ-டியூப் சேனல்,** இந்த சேனலில் புதிய புதிய சமையலை மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பொறுமையாகவும் விளக்கப்படுகிறது.




நூற்றுக்கணக்கான சமையல் குறிப்புகளையும், அவற்றை செய்யும் வழிமுறைகளையும் தெளிவான வீடியோமூலம் தெரிந்து கொண்டு சமைக்கலாம்.

நான்வெஜ், வெஜ், மூலிகை, ஸ்வீட், காரம் என பல்வேறு உணவுகளின் ரெசிபிக்கள் கொடுக்கப் பட்டுள்ளது.

தேங்காய் எண்ணெய்யில் பிரியாணி, நாட்டுக் கோழி பிரியாணி, இரால் பிரியாணி, மீல்மேக்கன் பிரியாணி, மட்டன் பிரியாணி போன்ற அசைவ பிரியாணிகளும், மழைகாலங்கள், பனிக்காலத்திற்கு ஏற்படும் உடல் பிரச்சனைகளை தீர்க்கும் நாட்டுக்கோழி ரசம் போன்ற உணவுகளின் சமையல்முறைகளை தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சைவ உணவில் மூலிகை ரசம், புடலங்காய் உருண்டை, சில்லி கத்தரிக்காய், கொள்ளு பிரியாணி போன்ற சூப்பர் உணவுகளை சுவையாக தயாரிக்கும் முறையை மிக அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்த சேனலை பார்த்து நீங்களும் பயன் பெறலாம், தெரியாத உணவை தெரிந்து கொள்ளுங்கள்.




# படத்தின் பேரு இந்தி

## ஆனா இந்திக்காரங்களை அவமதிப்பதா?

சூர்யா நடித்து ஐந்து மொழிகளில் வெளிவந்த ஜெய்பீம் என்ற இந்தி பெயரைக் கொண்ட படத்தில் இந்தி பேசும் சேட்டை, கன்னட வெறி கொண்ட பிரகாஷ்ராஜ் கன்னத்தில் அறைந்து தமிழில் பேசுமாறு சொல்லும் காட்சி இடம் பெறுகிறது.

உண்மை சம்பவத்தை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட 'ஜெய்பீம்' திரைப்படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்து வரும் நிலையில் படத்தில் இடம்பெற்றுள்ள இந்தி மொழி தொடர்பான காட்சி சர்ச்சையாகி, சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாகி இருக்கிறது.

விருத்தாச்சலத்தில் உள்ள கம்மாபுரத்தில் 1993–ஆம் ஆண்டு பழங்குடி இனத்தை சேர்ந்த ராஜாக் கண்ணு என்பவர் திருட்டு குற்றச்சாட்டின் பேரில் காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப் பட்டார். அந்தோணிசாமி என்ற காவலரால் கடுமையாக துன்புறுத்தப்பட்டு சடலமாககண் டெடுக்கப்பட்டார். இந்த விவகாரத்தை ராஜாக் கண்ணுவின் மனைவி செங்கேணி வழக்கறிஞர் சந்துருவிடம் எடுத்து வருகிறார்.

ராஜாக்கண்ணு விசாரணையின் போது தப் பித்து சென்று விட்டதாகவும், அப்படி தப்பித்து போகும்போது வழியில் விபத்தில் மாட்டி உயிர் இழந்ததாகவும் காவல்துறை சார்பில் சாட்சியங்கள் கொடுக்கப்படுகிறது.

காவல்துறை சார்பில் சொல்லும் சாட்சியங்கள் மெய்தானா, ராஜாக்கண்ணு உண்மையிலேயே திருடினாரா, பாதிக்கப்பட்ட செங்கேணிக்கு நீதி கிடைத்ததா என்று கதை நகரும். ஒடுக்கப்பட்ட பழங்குடி மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகள் என்னென்ன, அதில் இருந்து தப்பிக்க முயல்கி றார்கள், இதை நீதிமன்றம் எப்படி அணுகியது என்பதுதான் 'ஜெய் பீம்'.

'ஜெய்பீம்' திரைப்படத்தில் இந்த வழக்கு நீதி மன்றத்திற்கு வந்த பிறகு வழக்கை எடுத்து விசாரிக்கும் காவல்துறை அதிகாரியான ஐ.ஜி

பெருமாள்சாமி கதாப்பாத்திரத்தில் நடிகர் பிரகாஷ் ராஜ் நடித்திருப்பார்.

படத்தில் விசாரணையின் போது, உண்மை குற்ற வாளிகளை காட்டி கொடுக்க மறுக்கும் இடத்தில் அதை சமாளிப்பதற்காக திருடப்பட்ட நகைகளை வாங்கி விற்ற வட இந்தியாவை சேர்ந்த நபர் இந்தியில் பதில் சொல்வார். அதற்கு கன்னட நடிகர் பிரகாஷ்ராஜ் கதாப்பாத்திரம் அவரை கன் னத்தில் அறைந்து, 'தமிழில் பேசு' என்று சொல்வது போன்று காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

படத்தில் இந்த காட்சியை பார்த்துவிட்டு சமூக வலைத்தளங்களில் சிலருடைய கருத்தால் தற் போது சர்ச்சை கிளம்பி இருக்கிறது.

இந்த ட்வீட்டை பதிவிட்டிருப்பவரான திரைப்பட விமர்சகர் ரோஹித், "ஜெய்பீம் திரைப்படம் உண்மையில் மனதைக் கணக்க செய்தது.

ஆனால், இங்கு நான் ஒரு கருத்தை பதிவிட வேண்டும். இது தனிப்பட்ட முறையில் எந்தவொரு நடிகரையோ, வேறு யாரையுமோ குறிப்பிட்டு அல்ல. படத்தில் ஒரு காட்சி உள்ளது. அதில் ஒரு நபர் இந்தியில் பேசும்போது, பிரகாஷ்ராஜ் அவரை அறைந்து தமிழில் பேசச் சொல்வார். உண்மையில் இதுபோன்ற காட்சி தேவை இல்லாதது. படக்குழு இதைக் கருத்தில் கொண்டு நீக்குவார்கள் என நம்புகிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ் படங்களைத் தாங்கள் ஆதரிப்பதாக வும், தமிழ் படங்களுக்காககாத்திருப்பதாகவும், தமிழ் படங்களை பல மொழிகளில் வெளியிடுவதற்கும் வரவேற்பு கொடுப்பதாகவும் அதற்கு பதிலாக தாங்கள் எதிர்ப்பார்ப்பதெல்லாம் அன்பு மட்டும்தான் எனவும் அன்பு இல்லை என்றால் கூட குறைந்தபட்சம் மனிதநேயமாவது எதிர்ப்பார்க்கிறோம் எனவும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் "யாரும் குறிப்பிட்ட ஒரு மொழிக்கு எதி ரானவர்கள் என இங்கு நான் குறிப்பிடவில்லை. அந்த காட்சி எனக்கு மிகவும் வேதனையை ஏற் படுத்தியது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு புரிதல் இருக்கும். உண்மையில் அந்தக் காட்சி தேவை இல்லாதது. நான் ஒரு திரைப்பட விமர்சகராக பல வருடங்களாக, தமிழ்ப் படங்களுக்கு ஆதரவு அளித்து வருகிறேன். அந்த காட்சியில் அறைந்து கேட்பதற்கு பதில், 'தமிழில் பேசு' என சொல்லி யிருந்தாலே போதுமானது" என அந்த ட்வீட்டில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 'ஜெய்பீம்' படத்தின் இந்த காட்சிக்கு வந் திருக்கும் எதிர்ப்புக்கு, 'ஸ்கேம் 1992' இணையத் தொடரில் தமிழ் பேசும் ஒருவரை 'இந்தி தெரியாதா?' என அதிகாரி ஒருவர் விசாரிக்கும் காட்சியையும் இணைத்து, அந்த காட்சிக்கான

**“ படத்தில் அதிகாரவர்க்கம் என்ற போர்வை போர்த்தப்பட்டுள்ளது. அதிகார வர்க்கத்துக்கு எதிரான படம் என்ற பிம்பத்தை விளம்பரங்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறது. இந்த நிகழ்வு நடந்த சம்பவத்தை பிரதிபலித்து எடுக்கப்பட்டதாக இருந்தாலும், இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு நியாயம் வழங்கியவர்கள் முழுவதும் அதிகாரவர்க்கத்தினர்தான்.**



இந்து மதத்திற்கு எதிராக படத்தை சித்தரிக்கவேண்டும் என்று முனைப்பு காட்டப்பட்டுள்ளது, இதற்கு எடுத்துக்காட்டாக, ஒப்புக்கு சப்பானியாக ஒரு வக்கில் கேரக்டர் அடிக்கடி "சிவாய நம" என்று வசனம் பேசுவதாகவும், அந்த வார்த்தையை கேட்டவுடன் ஹீரோவுக்கு கடுங் கோபம் வருவதுபோல் அமைக்கப்பட்ட காட்சி எதற்கு என்று தெரியவில்லை. எறும்பு.... விரலை விட்டு ஆட்டுவதைப்போன்று இக்காட்சி, மாற்று மதத்தை சேர்ந்த சூர்யாவை திருப்திப்படுத்த அமைக்கப்பட்டிருக்கலாம்.

பதிலடிதான் இது என சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அமேசான் ப்ரைம் ஓடிடி தளத்தில் தமிழ்,தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம்என ஐந்து மொழிகளில் ஆங்கிலத்தில்சப் டைட்டில்களோடு வெளியானது. இதில் தமிழ், தெலுங்கில் இந்த காட்சிக்கு பிரகாஷ்ராஜ் கதாபாத்திரம் அறைந்து அந்தந்த மொழிகளில் பேசு என்று குறிப்பிடும்படியாகவும், இந்தியில் வெளியாகியிருக்கும் காட்சியில் மட்டும், எதிரில் இருப்பவரை அறைந்த பின்பு 'உண்மையைக் கூறு' என்று சொல்லியிருப்பது போலவும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தப் படம் முழுவதும் புரட்சி என்ற போர்வையில் கம்யூனிசத்தை திணித்திருக்கிறார்கள். உண் மையில் கம்யூனிஸ்ட் கட்சிமட்டும் அநீதிக்கு எதிராக குரல்கொடுப்பதாகவும் மற்ற கட்சிகள் மவுனமாக இருப்பதாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இதை தயாரித்தவரும், வெளியிட்டாளரும் கம்யூனிச சித்தாந்தை கடைபிடிப்பவர்களாக இருப்பதால் அவர்கள் சார்ந்த கட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

அதிகார வர்க்கத்துக்கு எதிரான படம்என்ற பிம்பத்தை விளம்பரங்கள் மூலம் வெளிப் படுத்தியிருக்கிறது. உண்மையில் இந்தநிகழ்வு நடந்த சம்பவத்தை பிரதிபலித்து எடுக்கப்பட்ட தாக இருந்தாலும், இந்த சம்பவத்தை வெளிக் கொண்டு வந்தபோது, அப்பெண்ணிற்கு நியாயம் வழங்கியவர்கள் முழுவதும் அதிகாரவர்க்கத் தினர்தான்.

தவறு செய்தவர்களுக்கு துணை போனதாக சுட்டிக்காட்டப்படும் அனைவரும் தவறை மறைத்து மற்றவர் மீது பழிபோடும் நோக்கத்தில்மட்டுமே செயல்பட்டுள்ளனர் இதில் அதிகார போக்கோ, ஜாதிபாகுபாடோ தலையிடவில்லை, ஆனால் படத்தில் அதிகாரவர்க்கம் என்ற போர்வை போர்த்தப்பட்டுள்ளது.

முக்கியமாக இந்து மதத்திற்கு எதிராக படத்தை சித்தரிக்கவேண்டும் என்று முனைப்பு காட்டப்பட்டுள்ளது, இதற்கு எடுத்துக்காட்டாக, ஒப்புக்கு சப்பானியாக ஒரு வக்கில் கேரக்டர் அடிக்கடி "சிவாய நம" என்று வசனம் பேசுவதாகவும், அந்த வார்த்தையை கேட்டவுடன் ஹீரோவுக்கு கடுங் கோபம் வருவதுபோல் அமைக்கப்பட்ட காட்சி எதற்கு என்று தெரியவில்லை. எறும்பு.... விரலை விட்டு ஆட்டுவதைப்போன்று இக்காட்சி மாற்று மதத்தை சேர்ந்த சூர்யாவை திருப்திப்படுத்த அமைக்கப்பட்டிருக்கலாம்.

படம் முழுவதும் காவல்துறையினரை மிகவும் கேவலமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது, சூர்யா வைத் தவிர மற்ற வக்கீல்கள் அனைவரும் கெட்டவர்கள் போன்று படம் முழுவதும் சொல்லப் பட்டுள்ளது.

ஒருசில சுயநலவாதிகள் ஒவ்வொரு துறையிலும் இருக்கத்தான் செய்வார்கள், அதற்காக ஒட்டு மொத்த துறையையும் குறை கூறுவது தவறு, இரண்டு மணி நேர படத்திற்கு ஹீரோவாக நடிக்க தன்னைத் தவிர மற்றவர்கள் அனைவரும் முட்டாள்கள், துரோகிகள், கெட்டவர்கள் என படத்தில் காட்டியுள்ளது சலிப்பை தட்டுகிறது.

மொத்தத்தில் ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள், ஆனால் சூர்யா எடுத்த ஒருசோறு புழுத்துபோன அரிசியில் செய்யப்பட்டது.

## புளுகு மூட்டை சூர்யா

படம் ஓடுவதற்காக நடிகர்கள் என்ன வேண்டு மானாலும் செய்வார்கள், சூர்யாநடித்த "ஏழம் அறிவு" படத்தில் தமிழரான போதிதர்மரை மைய மாக வைத்து படம் எடுத்து, அதே படம் இந்தியில் ரீமேக் செய்யும் போது போதி தர்மர் இந்திக்காரராக காட்சிப்படுத்தி, உண்மையான தமிழர்களுக்கு துரோகம் செய்தவர் சூர்யா, "ஜெய்பீம்" படத்தில் தாக்குதலுக்கு உள்ளானவரும், தாக்கியவரும் சிறுபான்மையினத்தை சேர்ந்தவர்கள், தாக்கிய காவலர் பெயர் அந்தோணிசாமி ஆனால் உயர் வகுப்பை சேர்ந்தவர்களால் கொல்லப்பட்டது போன்றுபுளுகுமூட்டையை அவிழ்த்துவிட்டுள்ளார் சூர்யா, என்று வலைதளங்களில் சூர்யாவை வறுக்க துவங்கியுள்ளனர்.

## சொல்பேச்சு கேட்காத ஸ்ருதி

# வயதான நடிகருக்கு ஷீரோயினியாக நடிக்க ஒப்புதல்




கமல்ஹாசனின் மூத்த மகள் ஸ்ருதிஹாசன். ஏ.ஆர். முருகதாஸ் இயக்கிய 7ம் அறிவு திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர். பூஜை, புலி, வேதாளம், சிங்கம் 3 உள்ளிட்ட பல படங்களில் நடித்து முன்னணி நடிகைகளில் ஒருவராக இருப்பவர்.

தமிழ் மட்டுமின்றி ஹிந்தி, தெலுங்கு என பல மொழிகளிலும் நடித்து வருகிறார். தற்போது விஜய் சேதுபதியுடன் லாபம் படத்தில் நடித்தார். இதுதான் அவரின் நடிப்பில் வெளியான கடைசி திரைப்படம். ஆனால், இப்படம் ரசிகர்களை கவரவில்லை.

ஸ்ருதிஹாசன் படப்பிடிப்பு இல்லாத நாட்களில் மும்பையில் தங்கியிருப்பார். தற்போது ஒரு புது காதலனையும் அவர் பிடித்துள்ளார். அவர் ஒரு ஓவியர் ஆவார்.

ஒரு பக்கம் வித்தியாசமான உடைகளை அணிந்து போட்டோஷூட் நடத்தி அது தொடர்பான புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு ரசிகர்களை கவர்ந்து வருகிறார். கவர்ச்சி, ஆபாசம் என எதையும் அவர் கண்டுகொள்வதில்லை.



இந்நிலையில், தெலுங்கு நடிகர் பாலகிருஷ்ணா நடிக்கும் அடுத்த படத்தில் அவருக்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிக்கவுள்ளாராம். பாலகிருஷ்ணாவுக்கு 61 வயது ஆகிறது.

ஸ்ருதிஹாசனுக்கு 35 வயது ஆகிறது. ஆனால், சினிமாவில் இது எல்லாம் சகஜம். ஏனெனில், தன்னை விட பாதி வயது குறைந்த பெண்களுடன் தான் சில மூத்த நடிகர்கள் ஜோடி போட ஆசைப்படுவார்கள். இந்த படத்தை கோபிசந்த் மலினேனி இயக்கவுள்ளார். இது பாலகிருஷ்ணாவின் 107–வது திரைப்படமாகும்.

தாத்தா வயசு உள்ளவருக்கு ஜோடியாக நடிக்க ஒப்புக் கொண்ட ஸ்ருதிஹாசனிடம், வயதான நடிகர்களுடன் நடித்தால் இளம் வயது நடிகருடன் நடிக்கும் வாய்ப்பு கேள்விக்குறியாகும், இந்தப் படத்தில் நடிக்க ஒப்புக் கொள்ளவேண்டாம் என்று நெருங்கிய வட்டாரங்கள் பல்வேறு அறிவுரை கூறிய போதும், அதைப்பற்றி கவலைப்படாமல் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார் ஸ்ருதி.

# வயது குறைந்த காதலர் லிப்லாக் புகைப்படம்

## சூப்பர் சிங்கர் மாளவிகா பரபரப்பு



தன் வருங்கால கணவருக்கு லிப் லாக் கொடுத்த புகைப்படம் ஒன்றை தன்னுடைய இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார் சூப்பர் சிங்கர் மாளவிகா. விஜய் தொலைக்காட்சியில் பல ஆண்டுகளாக ஒளிபரப்பி கொண்டு இருக்கும் நிகழ்ச்சி சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி தான். இது சீனியர், ஜூனியர் என்று மாறி மாறி ஒளிபரப்பி வருகிறது.

அதிலும் சூப்பர் சிங்கர் என்றே ஒரு தனி ரசிகர் கூட்டம் உள்ளது. அதுமட்டும் இல்லாமல் சூப்பர் சிங்கர் பல சீசன்களை கடந்து மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. மேலும், சூப்பர் சிங்கர் சீசன் 8 சமீபத்தில் தான் படு கோலகளமாக நிறைவடைந்தது.

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் மூலம் மக்கள் மத்தியில் பிரபலமானவர் தான் மாளவிகா சுந்தர். தற்போது இவர் பாடலுக்கு என்று ஒரு தனி ரசிகர் கூட்டமே உள்ளது. இந்த நிகழ்ச்சியின் மூலம் இவருக்கு படங்களில் பட வாய்ப்பு வந்தது. அது மட்டும் இல்லாமல் இவர் தமிழ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டது போல் ஹிந்தியிலும் ஒரு பாடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பைனல் வரை சென்றார்.

ஆனால், மாளவிகா அதில் வெற்றி பெற முடியவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன்னர் தான் இவர் தனக்கு நிச்சயதார்த்தம் முடிந்து விட்டதாக தனது வருங்கால கணவருடன் இருக்கும் புகைப்படம் ஒன்றை பதிவிட்டு இருந்தார். கடந்த சில தினங்களுக்கு முன் இன்ஸ்டாவில் வந்த மாளவிகாவிடம் ரசிகர் ஒருவர் 'உங்கள் கணவர் உங்களை விட வயதில் சிறியவரா ? இல்லை நீங்கள் சிறியவரா? என்று கேட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த மாளவிகா, என்னைவிட அவர் ஒரு வருடம் இளையவர் அவருக்கு முப்பத்தி இரண்டு வயது ஆகிறது என்று கூறியிருந்தார். இப்படி ஒரு நிலையில் தன் வருங்கால கணவருடன் லிப் லாக் முத்தம் கொடுத்த புகைப்படம் ஒன்றை பதிவிட்டுள்ள மாளவிகா "33 வயதில் எனக்கு சரியான காதல் கதையை கண்டுபிடித்துவிட்டேன்" என்று பதிவிட்டுள்ளார்.

தற்போது திருமணப்புகைப்படங்கள் பல்வேறு கோணங்களில் எடுப்பது வழக்கமாகிவிட்டது, மிகவும் ஆபாசமாகவும், பாலுணர்வைத் தூண்டும் வகையிலும் திருமண புகைப்படங்களை எடுக்கும் வழக்கம் தற்போது பெருகிவரும் இந்தசமயத்தில் மாளவிகாவின் லிப்லாக் பேசுபொருளாக மாறியுள்ளது.



# இணையதளத்தில்
# சினிமா, மினிமா செய்திகளையும்,
# இ–புத்தகத்தையும்
# படித்து மகிழுங்கள்











## beautibarlar-masage

பெண்கள் அழகுகலை, மசாஜ், அழகுசாதனப் பொருட்கள் விற்பனை செய்பவரா?
உங்களைப் பற்றிய குறிப்புகளை
www.thiraimalar.com இணையதளத்திலும்,
thiraimalar E-Magazine இல் வெளியிட்டு
வாய்ப்புக்கு வழிகாட்டுகிறோம்



வாட்சப் மற்றும் தொலை பேசியில் தொடர்பு கொள்ளவும்
9444264610

## சினிமா, தொலைகாட்சியில்

உங்கள் விருப்பமான துறையில், சாதிக்க விரும்புபவர்கள், உங்களைப் பற்றிய தகவலை எங்களுக்கு தெரிவியுங்கள்....
www.thiraimalar.com இணையதளத்திலும்,
thiraimalar E-Magazine இல் வெளியிட்டு
வாய்ப்புக்கு வழிகாட்டுகிறோம்



வாட்சப் மற்றும் தொலை பேசியில் தொடர்பு கொள்ளவும்
9444264610






## வீடு கட்டித்தரும் ராகவா லாரன்ஸ்

# 10 சதவித வருமானத்தை தருமா ஜெய்பீம் படகுழு

தமிழ் சினிமா உலகில் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவராக சூர்யா ஜொலித்துக் கொண்டிருக்கிறார். இவருடைய நடிப்பில் வெளிவந்த படங்கள் எல்லாமே நல்ல வரவேற்பை பெற்று உள்ளது. அதிலும் சமீபகாலமாக சூர்யா அவர்கள் கதைகளை தேர்ந்தெடுத்து படங்களில் நடித்து வருகிறார். மேலும், இவர் நடிப்பில் மட்டுமில்லாமல் 2டி என்டர்டெயின்மென்ட் நிறுவனம் மூலம் பல படங்களை தயாரித்து உள்ளார். அந்த வகை யில் தற்போது சூர்யா அவர்கள் இயக்குனர் ஞான வேல்

இயக்கத்தில் ஜெய் பீம் என்ற படத்தில்நடித்துள்ளார். இந்த படம் சில தினங்களுக்கு முன்பு தான் அமேசான் ப்ரைம் ஓடிடி தளத்தில் வெளியாகி உள்ளது.

இந்த படத்தில் மணிகண்டன், லிஜோமோல் ஜோஸ், பிரகாஷ் ராஜ் உட்பட பல நடிகர்கள்நடித்துள்ளார்கள். இந்த படம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பாராட்டுகளை குவித்து வருகிறது. பழங்குடியின மக்களின் வாழ்க்கை குறித்தும், உண்மையாலுமே அவர்களுக்கு நடந்த அநீதியை குறித்தும் சொல்லும் கதையாக ஜெய்பீம் அமைந்துள்ளது. இந்த படம் உண்மை சம்பவத்தை மையமாக வைத்து எடுக்கப்பட்டது.

அதே போல் இந்த படம் வெளியான பின்னர் உண்மையான ராசாக்கண்ணுவின் குடும்பத்தினரை தேடி பலரும் பேட்டி எடுத்து வருகின்றனர். அந்த வகையில் பிரபல ‘வலை பேச்சு’ குழுவினர் ராசா கண்ணுவின் மனைவியான பார்வதியை நேரில் சந்தித்து அவரது நிலையை பற்றி கூறினர். மேலும், பார்வதிக்கு ஒரு தங்க சங்கிலியை பரிசாக அளித்தனர். மேலும், அவர்கள் மிகவும் பாழடைந்த ஒரு குடிசையில் வாடகைக்கு வாழ்ந்து வருவதாகவும் அவர்களுக்கு சூர்யா வீடு கட்டித் தர வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

இந்த நிலையில் பார்வதிக்கு புதிய வீடு கட்டித்தரப்படும் என்று ராகவா லாரன்ஸ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவியில், செய்யாத குற்றத்துக்காகசித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட ராசாக் கண்ணுவின் மனைவி பார்வதி அம்மாளின் இன்றைய வாழ்க்கை நிலையை வலைபேச்சு மூலமாக பார்த்தபோது என்னை பெரிதும் பாதித்தது.

வலைபேச்சு பிஸ்மி அவர்களிடம் மேலும் விவரங்களை கேட்டு அறிந்ததும் கூடுதலாக துயருற்றேன். பார்வதி அம்மாவுக்கு எனது செலவில் வீடு கட்டிக் கொடுப்பதாக உறுதி அளித்து இருக்கிறேன். என்றார் ராகவா லாரன்ஸ்.

இதற்கிடையே ஜெய் பீம் படத்தின் வருவாயில் 10 சதவீதத்தை பாதிக்கப்பட்டராசா கண்ணுவின் மனைவி பார்வதிக்கு கொடுக்கவேண்டும்என்று ரசிகர்கள் மட்டுமின்றி பொது மக்களும்கருத்து கூறிவருகின்றனர். ஜெய்பீம் படத்திற்கு சம்பந்தமில்லாத ராகவா லாரன்ஸ் ராசாக்கண்ணுவின் மனைவி பார்வதிக்கு வீடு கட்டித்தரும்போது, ஜெய்பீம் படம் மூலம் வரும் வருவாயில் ஒரு பகுதி ராசாக்கண்ணு குடும்பத்திற்கு செலவழிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்து வருகிறது.




அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும்.
இராமேஸ்வரம் ஸ்ரீராமநாதசுவாமி கோவில் கும்பாபிஷேகம் காணவரும் பக்தர்களை அன்புடன் வரவேற்கும்
S.ஆனந்தகிருஷ்ணன் & கோ.,
மரம், ஓடு வியாபாரம் & சா மில்
எங்களிடம் ஒரிஜினல் (பர்மா) ஆஸ்திரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு மரம், மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகைமரங்கள், குமிழ்மரம், யுகாலி மரம், ரோடுவாகைமரம் பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது.
மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.
அதிநவீன வசதிகளுடன்
சீனியப்பா லாட்ஜ் A/c
போன்: 04574-268336
இராமேஸ்வரம் பை-பாஸ் ரோடு, மானாமதுரை.
S.ஆனந்தகிருஷ்ணன்
SAK
A.குணா (குணசீலன்)
செல் : 9842468256 9842868256


MAGAZINE
அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள், புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்
SML Graphics செல்: +91-9444228203



# "மக்கள் செல்வன் என்ற போர்வையில் விஜய் சேதுபதி வாழ்கிறார் மக்கள் மீது எந்த அக்கறையும், மரியாதையும் கிடையாது"

மக்கள் செல்வன் என்ற அந்தஸ்துடன் தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவராக இருப்பவர் விஜய்சேதுபதி. இவர் தமிழ் மொழியில் மட்டும் இல்லாமல் தெலுங்கு, இந்தி என்று பல மொழி படங்களிலும் நடித்து வருகிறார். மேலும், விஜய் சேதுபதி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கூட தொகுப்பாளராகவும் பங்கேற்று வருகிறார். சமீபத்தில் சூப்பர் டீலக்ஸ் படத்திற்காக விஜய் சேதுபதிக்கு சிறந்த நடிகர் என்ற தேசிய விருது வழங்கப்பட்டு இருந்தது. இது குறித்து பலரும் தங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்து இருந்தார்கள். அதுமட்டும் இல்லாமல் இவர் பல படங்களில் பிசியாக நடித்து கொண்டும், பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும் இருக்கிறார்.

அந்த வகையில் சமீபத்தில் பெங்களூரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்காக விஜய் சேதுபதி சென்றிருக்கிறார். அப்போது அங்கு இருந்த நபர் ஒருவர் விஜய் சேதுபதியை பின்புறமாக எட்டி உதைத்து இருந்தார். இதனை சற்றும் எதிர்பாராத விஜய்சேதுபதி மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாகி இருந்தார். பின்னர் விஜய்சேதுபதியை அங்கிருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றார்கள். மேலும், இது குறித்த வீடியோ சோசியல் மீடியா முழுவதும் பேசும் பொருளாக இருந்தது. இச் சம்பவம் குறித்து சோசியல் மீடியாவில் பல சர்ச்சைகள் எழுந்தது.

அதிலும் விஜய் சேதுபதிக்கும், உதைத்த நபருக்கும் இடையே சமாதானம் ஆனது என்றும் கூறி இருந்தார்கள். இந்நிலையில் விஜய் சேதுபதியை உதைத்ததற்கான காரணத்தை உதைத்தவரே பேட்டியில் கூறி உள்ளார். அதில் அவர் கூறியிருப்பது, "என் பெயர் மகா காந்தி. விஜய் சேதுபதி தேசிய விருது வாங்கியது அனைவருக்கும் தெரிந்தது. அதனால் விமான நிலையத்தில் அவரை பார்த்து பாராட்டுவதற்காக நான் சென்றேன். தேசத்திற்காக தேசிய விருது வாங்கியதற்கு வாழ்த்துக்கள் என்று நான் அவரிடம் சொன்னேன்.

அதற்கு அவர் இது தேசமா என்றார். அதே போல குரு பூஜையில் கலந்துகொள்வீர்களா என்று கேட்டேன். அவரோ யார் குரு" என்றார்.

விஜய் சேதுபதியை கேரளாக்காரர் அடித்துவிட்டார். கன்னடக்காரர் அடித்துவிட்டா என்று சொல்கிறார்கள். அதெல்லாம் இல்லை. தமிழன் மகா காந்தி நான்தான் அடித்தேன். அவர்கள் என்னை அடித்ததால் அடித்தேன். மக்கள் செல்வன் என்ற போர்வையில் விஜய் சேதுபதி வாழ்ந்து கொண்டிருக்கின்றார். உண்மையாலுமே அவருக்கு மக்கள் மீது எந்த அக்கறையும், மரியாதையும் கிடையாது. இனிமேலாவது மக்கள் இதை புரிந்து கொண்டு நடந்தால் நன்றாக இருக்கும்' என்றார். தற்போது இவரது பேட்டி சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# புலியாட்டம் உருவான விதம்



மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு புலி இறந்தால் தஞ்சை டெல்டாவில் பத்தாயிரம் ஏக்கர் நிலம் தரிசாகப் போய் விடும் எப்படி?

இதென்ன கயாஸ் தியரி?

அறியாதவர்கள் கவனமாகப் படித்து உயிர்ச் சங்கிலியின் சாராம்சத்தை தெரிந்து கொள்ளவும்.

மனிதன் வேட்டைச் சமூகமாக இருந்த காலத்தில் பிற உயிரினங்களைப் போலவே அவனது நீர்த்தேவையும் குறைவாகவே இருந்தது. குடிக்க, சமைக்க அரிதாகக் குளிக்க! அவன் வேளாண் சமூகமாக மாறிய பிறகு தான், பிற உயிரினங்களுக்கான நீரையும் அபகரிக்கும் அளவு அவனது நீர்த்தேவை அதிகமாக உயர்ந்தது.

தமிழகத்துக்கான மொத்த நீர்த்தேவையில் 70% நீரைத் தருவது தென்மேற்குப் பருவக் காற்று கொண்டு வந்து சேர்க்கும் மழை மேகங்கள் தாம். அந்த மேகங்களைத் தடுத்து நிறுத்தி, குளிர்வித்து மழையாகப் பெற்று, அதைத் தன்னுள் சேமித்து ஊற்றாக மாறி ஆறாக நமக்கு அனுப்பி வைப்பது மேற்கு மலைத்தொடர் மலையும்,காடும்.

பிரபஞ்சவெடிப்பில் உருவான மலைத்தொடர்கள் உடல் எனில் அதிலுள்ள காடுகள் அதன் உயிர். நித்தமும் ஒவ்வொரு நொடியும் அவை தன்னைப் புதிதாக உருவாக்கி உயிர்ப்பித்துக் கொண்டே இருக்கின்றன.

அது எப்படி?

முதன்முறை உருவான காடுகள் தேனீக்களாலும், பறவைகளாலும் பரந்து உருவாகியிருக்கும். சரியா?

அப்படி உருவான காடுகள் அடர்ந்து வளர்ந்த பிறகு, சூரியஒளி உட்புக வழியில்லாமல், புதிய செடிகள் முளைத்திருக்காது தானே! எனில், முதன்முறை உருவான காடு மீண்டும் உருவாக எத்தனை நூறாண்டுகள் தேவைப்படும்? இதற்குத் தான் மான், பன்றி, முயல் போன்ற தாவரப் பட்சிணிகளை இயற்கை உருவாக்கிக் கொண்டது.

இவைகள் மரங்களின் ஊடாகப் புகுந்து சிறு செடி, கொடி, கிழங்களைப் பிய்த்துத் தின்ன, அதனால் உருவாகும் இடைவெளியில் சூரிய ஒளி புகுந்து தக்க ஈரப்பதத்தை உருவாக்கி, பூஞ்சைக் காளான், சிறுசெடி,



கொடிகளுக்கு உயிர் அளிக்க அந்த அடர்ந்த வனம் மீண்டுமொரு முறை உயிர்ப்பிக்கப்படுகிறது.

சரி! இப்போது காட்டுக்கு புலியின் தேவை எங்கிருந்து வந்தது? சைவ பட்சிணிகளின் வரம் / சாபம் எந்நேரமும் தின்று கொண்டேயிருப்பது.. எப்போதும் இனப்பெருக்கம் செய்து கொண்டே இருப்பது. அப்படி அளவுக்கு அதிகமான மான், பன்றி, முயல்கள் உருவானால் சிறுசெடியைக் கூட தப்ப விடாமல் மேய்ந்து விடுமே!

இவற்றைக் கட்டுப்படுத்தத் தான் காடு தனது காப்பாளனாக புலியை உருவாக்கிக் கொண்டது. கிரிக்கெட்டில் தோனி போல காட்டில் புலி! அப்படியொரு ஜென்டில்மேன் அது. பசித்தால் தான் வேட்டையாடும். பசித்தாலும் சூள் கொண்ட மானைக் கொல்லாது. சில நேரங்களில் இளம் மான் குட்டிகளோடு விளை யாடுமளவு பெருந்தன்மையானது.

காட்டிலுள்ள சிறுத்தை, நரி போன்ற இதர மாமிசப்பட்சிணிகளைக்கூட சிறுவிலங்கு வேட் டைக்காக உடன் வசிக்க பெருந்தன்மையாகப் புலி அனுமதித்திருக்கிறது. ஆனால், மனிதனோ வெறும் அரைபாட்டில் பிராந்திக்காக புலியையும் கொல்வான்! மானையும் கொல்வான். எனவே தான் மனிதன் ஒரு மகத்தான சல்லிப்பயல் ஆகி றான்.

ஒரு புலி உயிர் வாழ ஆயிரம் சதுரகிலோமீட்டர் காடு தேவை. அத்தனைப் பெரிய பரப்பளவை பராமரித்து ஆண்டு ஆட்சி செய்கிறது ஒற்றைப் புலி! ஒரு காட்டின் ஆரோக்கியம் அதில் எத்தனைப் புலிகள் வசிக்கின்றன எனும் எண்ணிக்கையில் தான் கணக்கிடப்படும். எனவே தான் ஒரு புலி இறந்தாலும் நாம் பதற வேண்டியிருக்கிறது.

ஆக, புலிகள் இல்லையெனில் மேற்குமலைக் காடுகள் இல்லை! காவிரி இருந்திருக்காது. கரிகாலன் கல்லணை கட்டியிருக்க முடியாது. ராஜராஜன் பெரும் சாம்ராஜ்யம் அமைத்திருக்க முடியாது.ராஜேந்திரன் கடல்கடந்து வென்றிருக்க முடியாது. இயல்,இசை,நாடகம் இல்லை. எனவே தான், சோழர் கொடியில் புலி வீற்றிருந்தது.

எனவே தான் மாடு கட்டி போரடித்தால்மாளாது என யானை கட்டி போரடித்த தஞ்சை நெற்களஞ் சியத்தின் தொல்குடி மக்கள் தமது கடவுளாக புலிகளை வணங்கினர். கோவில்களில் முதல் சிற்பம் புலி. திருவிழாக்களில் முதல் ஆட்டம் புலியாட்டம். காட்டுக்கே போகாமல், புலியையே காணாமல் புலியின் அருமையை அறிந்திருந்தனர்.

புலிகள் இல்லாவிடின் காவிரி, தென்பெண்ணை, வைகை நமக்கு இல்லை. இவைகள் இல்லாமல் தமிழகம் வெறும் பாலைவனம். ஓடங்களில் சென்றிருக்க முடியாது. ஒட்டகங்களில் தான் பயணித்திருக்கணும்.

நண்பர்களே! மனித வாழ்வின் ஆதாரம் நீர். அந்த உயிர்நீரை அளிப்பது காடுகள். அந்தக் காடுகள் நமக்குக் கோவில் எனில் அதில் வாழும் கடவுள் புலிகள். காடுகளுக்குச் செல்லும் போது ஜாலியாக பியர்பாட்டிலை உடைத்து வீசும் போது, அவை நமக்களித்த உணவை, மொழி யை, பண்பாட்டை இழிவு செய்கிறோம் என்பதை உணருங்கள்.





# கமல்- ரஞ்சித் கூட்டணியில் புதிதாக உருவாகும் புரட்சி படம்

கபாலி படத்தின் மூலம் பெயர் பெற்ற இயக்குநர் ரஞ்சித், அதே பாணியில் கமலை வைத்து ஒரு புரட்சிப்படம் தயாரிக்கவிருப்பதாக கோடம்பாக்கம் வட்டாரத்தில் பேச்சு அடிபடு கிறது.

அண்மையில் நடிகர் கமல்ஹாசனின் 67வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதில் கலந்து கொண்ட திரையுலகினர், சினிமா பிரபலங்கள் பலரும் கமலுக்கு வாழ்த்து தெரி வித்தனர்.

அந்தவகையில் கமல்ஹாசனை இயக்குநர் ரஞ்சித் அவரது அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கும்போது, கூடவே ஒருவரிக் கதை ஒன்றையும் கமலிடம் கூறியுள்ளார்.

தற்போது புரட்சி, ஜாதி, மத ரீதியான படங்கள் அதிகம் வெற்றிபெறுவதால், அதைப் போன்ற கதைக் கரு கொண்ட படத்தின் ஒருவரிக்கதை கமலை ஈர்த்துள்ளது.

இந்த சந்திப்பின்போதே, புதிய படத்தில் இருவரும் கைகோர்ப்பது குறித்து ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் நடிகர் கமல், ரஞ்சித் கூறிய ஒருவரிக் கதையின் முழு ஸ்கிரிப்டையும் தயாரிக்கும்படி கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


அந்த வகையில் லோகேஷ் கனகராஜ் இயக் கத்தில் கமல் நடிக்கும், 'விக்ரம்' திரைப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் நிறைவடைய உள்ள நிலையில், அவர் அடுத்தாக மகேஷ் நாராயணன் இயக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார். இதையடுத்து ரஞ்சித்தின் இயக்கும் புதிய படத்தில் அவர் கைகோர்க்கலாம் என தகவல் வெளியாகியிருக்கிறது.

அடுத்த புரட்சிப் படம் கமல் ரஞ்சித் கூட் டணியில் உருவாகவிருப்பதாக கூறப் படுகிறது.


**சினிமா துறையில் ஆர்வமுள்ளவரா நீங்கள்... நிருபராக பணியாற்ற விரும்புகிறீர்களா?**

**சினிமா, சின்னத்திரை, லைப்ஸ்டைல், லேடீஸ் ஸ்பெஷல் போன்ற பல்துறை அனுபவம் மிக்க நபர்கள் தொடர்பு கொள்ளவும்.**

**9444264610/ 9841807572**




# சினி துறையில் சாதனை

சினிமாத் திரையில் நீங்கள் எந்த துறையில் சாதிக்க விரும்பினாலும் அதைப்பற்றி எங்களுடன் முழுவதுமாக பகிர்ந்து கொள்ளுங்கள்



www.thiraimalar.com இணையதளத்திலும், thiraimalar E-Magazine இல் வெளியிட்டு



வாய்ப்புக்கு வழிகாட்டுகிறோம்

வாட்சப் மற்றும் தொலை பேசியில் தொடர்பு கொள்ளவும்

9444264610

# beautibarlar-masage

பெண்கள் அழகுகலை, மசாஜ், அழகுசாதனப் பொருட்கள் விற்பனை செய்பவரா? உங்களைப் பற்றிய குறிப்புகளை



www.thiraimalar.com இணையதளத்திலும், thiraimalar E-Magazine இல் வெளியிட்டு



வாய்ப்புக்கு வழிகாட்டுகிறோம்

வாட்சப் மற்றும் தொலை பேசியில் தொடர்பு கொள்ளவும்

9444264610



**Owned, Published by N.Geetharani. Design by SML GRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : N.Geetharani, Cell: 9444264610.**
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com

# சினி துறையில் சாதனை செய்ய விரும்புகிறீர்களா?

உங்களைப்பற்றிய விவரங்களை
எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்
உங்கள் ஆர்வத்தையும் திறமையும்
திரைமலர்.காம் இணையதளம் மற்றும்
இ-புக் வாயிலாக வெளியிடுகிறோம்.
சினிமாவில் நீங்கள் விரும்பும்
துறையைப் பற்றி விரிவாக
எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்...

**9444264610**

**9841807572**

